# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,205 — 1960 සැප්තැම්බර් 23 වැනි සිකුරාදා — 23.9.1960**

12,205 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 233 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 235 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் ... | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### உணவு அதிகாரியின் காரியாலயம்

#### தலைமை முகாரி பதவி

உணவு அதிகாரியின் காரியாலயத்தில் தலைமை முகாரி (போர்மன்) பதவிக்கு விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் பத்திரத்தில் செய்யப்பட்டு 8.10.60 அன்றே அல்லது முன்னரோ கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 330 ம் இலக்கத்திலுள்ள உணவு அதிகாரிக்கு விலாசமிடப்படல் வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—வருடமொன்றிற்கு ரூ. 960—72—2,112 (ரூ. 1,608 க்குமுன் வினைத்திறமை காண் தடை.)

3. **தகுதிகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வருவனவற்றைக் குறிப்பிடும் திருப்திகரமான சான்று காட்டவேண்டும்.

(1) ஓர் இலங்கைப் பிரஜை என்றும் ;

(2) 8.10.60 அன்று 25 வயதுக்கும் 45 வயதுக்குமிடையான வயதுடையவரென்றும் (காரியாலய ஊழியருக்கு வயதுத்தடை இல்லை) ;

(3) கனிஷ்ட தராதரப்பரீட்சையில் சித்தி பெற்றோ அல்லது வேறு சமமான பரீட்சையில் சித்தியடைந்தோ ;

(4) மோட்டார் வாகனங்கள் திருத்துதல், உபயோகம், பற்றிய தகுந்த அனுபவம் இருப்பதாகவும் (பெற்றோல் டீசல்) வேலைக்கள மேற்பார்வையில் அனுபவம் உடையவரென்றும் ;

(5) தனிப்பட்ட வேலைக்களத்தில் 5 வருடம் வேலைசெய்த அனுபவம் உண்டென்றும் ;

(6) லொறி வண்டிகள் ஓட்டுவதற்கு தகுதிப்பத்திரம் உடையவரென்றும்.

**குறிப்பு.**—மேற்குறிப்பிட்டுள்ள எல்லாத்தகுதிகளையும் உடைய தகுந்த விண்ணப்பதாரர் கிடையாவிடில் (2) (3), (4) ம் கூடுகளில் குறிப்பிட்டுள்ள தகுதிகளை உடையவர்கள்.

4. **நியமன நிபந்தனைகள்.**—பதவி, நிரந்தரமானதும், பென்ஷனுடையதும், கைம்பெண்கள் அனுதையர் பென்ஷன் திட்டத்திற்கு உதவிப்பணம் செலுத்தக்கூடியதும்.

5. நியமனம் மூன்று வருடத்திற்கு தகுதிகாண் நிலையினதாயிருக்கும். பென்ஷன் பெறும் உத்தியோகத்திலுள்ள ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், முதலில் பதிலாக்கடமையாற்ற நியமனம் செய்யப்படும்.

கே. எம். டி. ஜயனெத்தி,
உணவு அதிகாரி.

### மாதிரிகைப் பத்திரம்

#### தலைமை முகாரி பதவி — உணவு அதிகாரியின் காரியாலயம்

1. (அ) முழுப்பெயர் : ———— .
   (ஆ) நாட்டினம் : ———— .
   (இ) தபால் விலாசம் : ———— .
2. பிறந்த திகதியும் இடமும் : ———— .
   (அ) விண்ணப்பதாரர் : ———— .
   (ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் : ———— .
   (இ) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப் பாட்டனர் : ———— .
3. 8.10.1960 அன்று வயது : ———— .
4. கல்வி, மற்றைய தகமைகள் : ———— .
   (தொழில் நுட்பத்தகமை, மற்றைய தகமைகள் பற்றிய சான்றுகள் அணைக்கப்பட்டுள்ளன).
5. லொறிகள் ஓட்டும் தகமைச்சான்றின் இலக்கமும், திகதியும் : ———— .
6. பாடசாலையிலிருந்து விலகியபின் செய்துள்ள தொழில்கள், இருப்பின் : ———— .
7. நன்னடத்தைச் சான்றுகள் பெறக்கூடிய இருவருடைய பெயர்களும், விலாசமும், தொழிலும் : ———— .

———— .
கையொப்பம்.

திகதி : ———— .

9354.

---

### இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி

#### பிரதான இயந்திரவேலை இஞ்சினியரின் பகுதி—இரத்மலானை

இலங்கை அரசினர் புகையிரதப் பகுதியின் பிரதான இயந்திரவேலை இஞ்சினியரின் பகுதிக்கு தற்காலிக பட்டம் வரை அறிஞர் தரம் II ற்கு, இரண்டு காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜைகளாகவும், விண்ணப்பங்கள் அனுப்புமாறு கோரும் முடிவுறு தேதியன்று 21 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் என்பதோடு கீழ்க்காணுவனவற்றிற்கும் திருப்திகரமாக அத்தாட்சிப் படுத்தல் வேண்டும் :—

(ஏ) நன்று பொதுக்கல்வி பயின்றவராகவும் ;

(பீ) தொழில் நுட்பக் கல்லூரியில் முழுப்பயிற்சி பெற்ற ஏதாவது ஒரு எந்திரத் தொழில் தத்துவப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இயந்திரவேலை எந்திரத் தொழில், மின் எந்திரவியல், அமைப்பெந்திரவியல், அல்லது அதற்குச் சமமான அல்லது அவற்றிலும் மேலான பரீட்சையில் அல்லது

(சீ) ஓர் எந்திரத்தொழில் நிலையத்தில் மூன்று வருடங்களுக்கு அதிகமாக இயந்திர வேலைப் படம் வரை அறிஞராகக் கடமையாற்றியவராகவோ, அல்லது

(டீ) மேலே (பீ) யில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளுள் தொழில் நுட்பக் கல்லூரியில் எந்திரத்தொழில் மூன்று வருடகாலம் பயில வேண்டியதில் இரண்டு பரீட்சைகளில் இயந்திரவேலைப் படம் வரை அறிஞர் எந்திரத் தொழிலில் போதிய அனுபவத்துடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(3) தகைமைக்கும் அனுபவத்திற்கும் தகுந்தவாறு நியமனத்தின் போது வருடச் சம்பளம் ரூ. 1260—120—ரூ. 3780 என்ற விகிதத்தில் (ரூ. 2820 வருடத்திற்கு, உழைக்குமுன் வினைத் திறமைகாண்தடை) இருக்கும். இப்பதவி தற்காலிகமானதும் இளைப்பாற்றுச் சம்பளமற்றதும்.

4. தலைமை அதிபதி, இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, மருதானை என்ற முகவரிக்கு கீழே தரப்பட்டிருப்பது போன்ற படிவத்தில் விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ந் திகதி, மாலை 4 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படல் வேண்டும். புகையிரதப்பகுதியின் எவ் உத்தியோகத்தருக்காவுதல் நேர் முகமாக விண்ணப்பங்கள் முகவரியிட்டு அனுப்பக்கூடாது.

5. எப்பொழுதாவுதல் நேர்முகப் பரீட்சைக்குவருமாறு பணிக்கப் பட்டால் விண்ணப்பதாரிகள் தங்களது சொந்தச் செலவில் மருதானையிலுள்ள இலங்கை அரசினர் புகையிரதப் பகுதியின் தலைமை அதிபதியின் அலுவலகத்திற்கு வருவதற்குச் சித்தமாயிருத்தல் வேண்டும்.

6. பிரதான இயந்திர வேலை இஞ்சினியர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, இரத்மலானை என்ற விலாசத்திற்கு விண்ணப்பித்து மேலும் விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

7. அரசாங்க சேவையின் பதவிகளின் நியமனங்களுக்குத் தகுதியான பொது நிபந்தனைகளுக்கு இவ்வர்த்தமானியின் முதலாம் பகுதியின் தொடக்கத்தையும் இரண்டாம் பிரிவையும் பார்க்கவும்.

பி. டி. றம்பால,
தலைமை அதிபதி.

தபால் பெட்டி 355,
கொழும்பு,
1960 ம் ௵ செப்டம்பர் ௴ 15 ந் ௳.

## மாதிரிப்படிவ விண்ணப்பப் பத்திரம்

**இலங்கை அரசினர் புகையிரத பிரதான இயந்திரவேலை இஞ்சினியரின் பகுதிக்கு (தற்காலிக) படம் வரை அறிஞர் தரம் II ற்கு நியமன விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (பெரிய எழுத்தில்) : ————.
   குடும்பப் பெயர் : ————.
   மற்றும் பெயர்கள் : ————.
2. தபால் விலாசம் : ————.
3. (ஏ) இலங்கைப் பிரஜையாக இருந்தால் கீழ்க்காணும் விபரங்கள் தருக :
   (i) வம்சாவழியா, அல்லது : ————.
   (ii) பதிவுசெய்யப்பட்டதினாலா : ————.
   (பி) பிறந்த இடம் : ————.
   (i) விண்ணப்பதாரர் :————.
   (ii) விண்ணப்பதாரரின் தந்தை : ————.
   (iii) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டன் : ————.
   (iv) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் ; ————.

**குறிப்பு.**—விண்ணப்பதாரரும் அவரது தந்தையும் இலங்கையில் பிறந்தவரானல் (i) ம் (ii) ம் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர் அல்லது அவரது தந்தை இலங்கையில் பிறவாதிருப்பின் (i), (ii), (iii), (iv) ம் நிரப்புதல் வேண்டும்.

4. பிறந்த திகதி :
   14.10.60 ல் வயது : ————.
   வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————.
5. விவாகம் ஆனவரா ஆகாதவரா ? : ————.
6. தற்போதைய தொழில் : ————.
7. தற்போது தொழில் இல்லாவிடில் கடைசியாகச் செய்த தொழில் :————.
8. கல்வித் தகைமைகள் :
   பொது :—
   பாடசாலைகள் : ————.
   சித்தியடைந்த பரீட்சைகள் : ————.
   தொழில் நுட்ப : ————.
   எங்கே கற்றது : ————.
   சித்தியடைந்த பாடங்கள் :————.
9. மிகவும் பழக்கமும் அனுபவமும் உள்ள ஒவ்வொரு பாடங்களைப் பற்றியும் சுருக்கமாகத் தருக : ————.
10. முன் அனுபவம் ஏதாவதிருப்பின் : ————.
11. ஏதாவது குற்றவியல் வழக்கில் நீதிமன்றத்தில் குற்றவாளியெனக் காணப்பட்டுள்ளீர்களா ? அப்படியானல் வழக்கு நடந்த தேதி, குற்றத்தின் விபரங்கள், தண்டனை, நீதிமன்றத்தின் பெயரும் வழக்கின் இலக்கமும் : ————.

நான் இவ்விண்ணப்பப் பத்திரத்தில் எழுதியுள்ள விபரங்கள் யாவும் உண்மை என இத்தால் வெளிப்படுத்துகிறேன். என்னை திறமைக் குறைவுக்காக சேவையினின்றும் இளைப்புறுமாறோ அல்லது அரசாங்க சேவையினின்றும் விலக்கவோ இல்லை எனவும் இத்தால் வெளிப்படுத்துகிறேன். இத்தால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் பொய் அல்லது பிழையானல் என்னைத் தெரிவு செய்யப்படமுன்பு செம்மையில்லை எனவும் கண்டு பிடித்தால் நான் தகைமை நீக்கம் செய்யப்படலாம் என்பதையும் நியமனத்தின்பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி என்னை வேலை நீக்கம் செய்யலாம் என்பதையும் அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பக்காரரின் ஒப்பம்.

திகதி : ————.

(ஏ) விண்ணப்பம் சுருக்கமாகவும், சரியாகவும், தெளிவாகவும் விண்ணப்பக்காரரின் கை எழுத்தால் நிரப்புதல் வேண்டும்.

(பீ) விண்ணப்பத்துடன் பிரதிக் குணுதிசயப் பத்திரங்கள் மூன்றுக்குக் கூடாமல் இணைக்கப்படல் வேண்டும்.

(சீ) இவ்விண்ணப்பம் அனுப்பும் உறையின் வெளிப்புறத்தில் " படம் வரை அறிஞர், தரம் II. (தற்காலிக) " எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
9184

---

## அரசினர் கலைக் கல்லூரி

### புத்தகப் படம் வரைதல் பயிற்சி வகுப்பு

அரசினர் கலைக் கல்லூரியில் மாணவர்கள் அல்லாது மற்றவர்களின் நன்மைக்காக யூனெஸ்கோ புத்தகப்படம் வரைதலின் நிபுணரான திரு ஜான் தோமியோ ஐப்பசி மாதத்திலிருந்து ஒரு விசேட பயிற்சி வகுப்பு நடாத்துவார்.

இப்பயிற்சி வகுப்பில் சேரவிரும்புவோர் ஐப்பசிமாதம் 4 ம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ அரசினர் கலைக்கல்லூரி அதிபருக்குக் கடிதமூலம் எழுதி விண்ணப்பிக்கவேண்டும்.

தொழில் சம்பந்தமான சித்திர வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களினதும், மற்றும் மதிக்கப்பட்ட கலைக்கல்லூரிகளில் பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்களினதும் விண்ணப்பங்கள் விசேடமாகக் கவனிக்கப்படும்.

பயிற்சி ஐந்து மாத காலம் வரையும் நடை பெறும். ஏதாவது நான்கு கிழமை நாட்களில் மாலை 4.45 முதல் 6.45 மணி வரை வகுப்பு நடை பெறும். கல்லூரி விடுதலை நாட்களில் வகுப்பு நடை பெருது. மின்சார முதலிய ஏனைய செலவுகளுக்காக மாணவர்களிடமிருந்து சிறுகட்டண்ப்பணம் வசூலிக்கப்படும். பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களது சொந்த உபகரணங்களை வகுப்பிற்கு கொண்டுவருதல் வேண்டும். குறிக்கப்பட்ட ஒரு தொகையினரே பயிற்சிக்கு அனுமதிக்கப்பட முடியு மாதலால் இவர்கள் 'ஒரு நேர் முகப்பரீட்சையின் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பரீட்சைக்கு தேவைப்படுமாயில் இவர்கள் தங்களது மாதிரி வேலைகளைச் சமர்ப்பிக்கத் தயாராகயிருத்தல் வேண்டும். பயிற்சிக்கு அனுமதித்தல் பற்றி அதிபதியின் தீர்மானங்களே முடிவானது.

எம். ஜே. பெரேரா,
பதில் அதிபதி.

அரசினர் கலைக்கல்லூரி,
46, கோட்டன் பிளேஸ்,
கொழும்பு 7,
1960 ம் ௵ செப்ரெம்பர் ௴ 19 ந் ௳.
9365.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

மொனருகலை உப-பிரிவிலுள்ள ஹம்பகமூவா II ம் இலக்க திட்டத்தை அமைப்பதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் கொழும்பு 1 ; 355 ம் இலக்க அறையிலுள்ள விவசாய, நில அமைச்சின் விண்ணப்பப் பத்திரச் சபைத் தலைவர் அவர்களால் 8.11.1960 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசன இலாகாவிலும், புகையிரதப் பகுதியிலும், பொதுமராமத்து இலாகாவிலும் ரூபா 100,000 க்கு அல்லது அதற்குமேலும் பதிவு செய்துள்ள கொந்தராத்துக்காரர்கள் மட்டுமே மேற்படி கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கத் தகுதியுடையோராவர். பண்டாரவளையிலுள்ள ஊவாப் பகுதியின் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். எந்தக் கச்சேரியிலேனும் கட்டுப்பணம் ரூபா 250 கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து விண்ணப்பப் பத்திரங்களை 4.11.1960 வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். பண்டாரவளையிலுள்ள கந்தோரில் மேலதிகமான விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பி. செல்லகேவா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1960 ம் ஆண்டு செப்டம்பர் மீ 3 ந் உ.
9249

---

## நீர்ப்பாசன இலாகா

கல்முனை நீர்ப்பாசன உப—பகுதியின் அதிகாரிக்குட்பட்ட இடங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் புகையிரத ஸ்தானத்திலிருந்தும், புகையிரத ஸ்தானத்திற்கும், அரசாங்க பண்டகசாலைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் ஒப்பந்தக்காரரிடம் கேள்விப்பத்திரங்கள் கீழ் மாகாணம் மட்டக்களப்புப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் புரட்டாதி மாதம் 28 ந் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கல்முனை உப—பகுதி நீர்ப்பாசன அதிகாரியிடம் இருந்து பெறும் பத்திரங்களில் இரு பிரதிகளாக விண்ணப்பித்தல் வேண்டும். சகல ஏனைய விபரங்களை இவரிடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.

நீர்ப்பாசன இலாகாவில் பதிவுசெய்யப்பட்ட கொந்திருத்துக்காறர்கள் என்று நிரூபிப்பவர்கட்கு புரட்டாதி மாதம் 27 ந் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணி வரைக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப் படும். கல்முனை உப—பகுதி நீர்ப்பாசன அதிகாரியிடம் இருந்து ரூபா 25/= கட்டுப் பணம் செலுத்தினுல் வழங்கப்படும்.

கீழ்மாகாணம் மட்டக்களப்புப் பெரும்பாகப் பொறியியலிலாக்காக் காரியாலயத்தில் 28.9.60 காலை 10.00 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

இலங்கையரல்லாதார்க்குக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.

இ. பூபாலசிங்கம்,
நீர்ப்பாசனப் பொறி இயலாளர்.

9247

---

## நீர்ப்பாசன இலாகா

வடகிழக்குப் பகுதி நீர்ப்பாசன இஞ்ஞினியர் அவர்களால் 1960/61 நிதி வருடத்தில் பொருட்கள் ஏற்றி செல்வதற்குரிய கேள்விகளை 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த இலாகாவில் ரூபா 10,000 த்திற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பக்காரர்கள் ரூபா 25 வைப்புப் பணமாக எந்தக் கச்சேரியிலாவது அல்லது கவுடுள்ள உபபகுதி நீர்ப்பாசன கந்தோரிலாவது பிணைப் பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச் சீட்டை இஞ்ஞினியர் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் பதிவு செய்த தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவு செய்த தபால்மூலம் அனுப்பவிரும்பாத உள்ளூர் விண்ணப்பக்காரர்கள் நேரிலே சீல் பண்ணப் பட்ட கேள்விப்பத்திரங்களை இஞ்ஞினியர் அவர்களிடம் சமர்ப்பிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின்மீது வேலையின் விபரம் வலது கரையில் எழுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கவுடுள்ள உபபகுதி நீர்ப்பாசன இஞ்ஞினியர் அவர்களால் 1960 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 23 ம் திகதி வெள்ளிக் கிழமை முதல் ஐப்பசி மாதம் 14 ம் திகதி வெள்ளிக்கிழமைவரை வழங்கப்படும்.

எந்த விதக் கேள்விப்பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ இஞ்ஞினியர் அவர்களுக்கு உரிமை உண்டு.

கேள்விப்பத்திரங்களை திறந்து பார்வையிடும்பொழுது விண்ணப்பக்காரர் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

ஜி. எஸ். எம். சொக்மன்,
நீர்ப்பாசன இஞ்ஞினியர்,
கவுடுள்ள உபபகுதி.

9104

---

### மகருக் கல்லுடைப்பிலுள்ள தென்னைமரங்களின் பயனைப் பெறக் குத்தகை

15.10.60 ல் இருந்து ஒரு ஆண்டிற்கு மகருக் கல்லுடைப்பு இடத்திலிருக்கும் தென்னை மரங்களின் பயனைப் பெறுவதற்கான குத்தகைக்கு, 1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் துறைமுக ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு துறைமுக ஆணையாளர் களரியில் ரூபா 25/= கட்டி, அக்களரியிலிருந்து பெற்றுக் கொள்ளும் விசேட கேள்விப் பத்திரம், இணைப்பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3 ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி வரையில், களரி வேலை நேரங்களில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இக்கேள்விக்கான முழு விபரங்களும் கேள்விப் பத்திரங்களுடன் கிடைக்கும்.

ஏ. எஸ். கோபன்விக்ரம,
துறைமுக ஆணையாளர்.

கப்பற்றுறை அதிகாரசபை,
கொழும்பு,
1960 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 14 ந் உ.

9183

---

## இலங்கை போக்குவரத்து சபை

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் கண்டி தெற்கு டிப்போவில் வேலி அமைப்பதற்கு 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ம் திகதி மு.ப. 10 மணிவரை கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு, போரலஸ்கமுவ வெரஹெரையிலுள்ள பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியருக்கு விண்ணப்பிக்கவும்.

ரூ 15,000 க்கும் மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக்குப் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரரே கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கலாம். அவர்களுடைய சான்றோலைகள் போரலஸ்கமுவ வெரஹெரை பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியரின் பரிசோதனைக்கு காட்டப்பட்டு அவரால் அங்கீகரிக்கப்படவேண்டும். அப்படியான சான்றோலைகள் பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இ.போ.ச. பிரதம கணக்காள உத்தியோகஸ்தரிடம் கேள்விப்பத்திரக்கட்டுப் பணமாக ரூ 100 ஐக் கட்டவேண்டும்.

கட்டுப்பணப் பற்றுச் சீட்டை காட்டுவதன் பேரில் பிரதி பிரதம (சிவில்) இஞ்சினியர் 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கேள்விப் பத்திரங்களை வழங்குவார்.

இ.போ.ச. வால் வழங்கப்பட்ட பத்திரங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கவேண்டும்.

சி. ஐ. எட்வேட்ஸ்,
பதில் செயலாளர,
இலங்கை போக்குவரத்து சபை.

1960 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 17 ந் உ.

9370

## மொனருகல கச்சேரி வாகனங்கள்

மொனருகல மாவட்ட அதிபர் மொனருகல கச்சேரியில் வாகனங்கள் நிறுத்துவதற்காக 4 திறந்த கட்டிடங்களும் 2 மூடிய கட்டிடங்களும் அமைப்பதற்காக 14.10.60 முற்பகல் 12 மணிவரை ஒப்பந்தப்பத்திரங் கள் பதிவு செய்த கேள்விக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்வார்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் மொனருகல அதிபரிடம் ரூ. 25/- இலங்கையில் உள்ள எந்தக் கச்சேரியில் அல்லது பொதுத்திறைசேரியில் கட்டிய பற்றுச்சீட்டு சமர்ப்பிப்போருக்கு 13.10.60 பிற்பகல் 3 மணி வரை வழங்குவார்.

ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் சீல்வைத்த காகித உறையில் " மொன ருகல் கச்சேரி—வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டிடங்கள் அமைப்பதற்கு கேள்விப்பத்திரம் " என எழுதி அரசாங்க மாவட்ட அதிபர், கச்சேரி, மொனருகல என்னும் விலாசத்திற்கு அனுப்பவேண்டும். ஒப்பந்தப் பத்திரங்களை பதிவு செய்த காகிதம் மூலம் அனுப்பலாம் அல்லது காரி யாலய உதவியாளரிடம் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் போட லாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர், ஒப்பந்தம் அளிக்கப்பட்ட உடனே வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையும் ஏற்கும் அல்லது ஏற்க மறுக்கும் அல்லது எதனையும் ஏற்கும் உரித்து மொனருகல அதிபருக்கு உரியதாகும்.

வி. பி. சில்வா,
மொனருகல மாவட்ட அதிபருக்காக.

கச்சேரி,
மொனருகல,
1960 ம் ஆண்டு செப்டம்பர் மீ 15 ந் உ.
9248

## விளம்பரம்

1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 26 ந் திகதி திங்கட்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 30 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல் களும் 1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 24 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படு கின்றது.

பேர்னூர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மீ 9 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.